


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், புதுமைப்பெண் திட்டத்தில் விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்ததையொட்டி இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை முகமது சதக் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தலைமையில், பால்வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், புதுமைப்பெண் விரிவாக்க திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு பற்று அட்டைகளை வழங்கினார். இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், முன்னாள் அமைச்சர் வ. சத்தியமூர்த்தி மற்றும் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மற்றும் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம்,துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ஒன்றிய கவுன்சிலர் வழக்கறிஞர் கே. கதிரவன், கீழக்கரை நகர் மன்றத் தலைவர் ஆபிதா, துணைத் தலைவர் ஹமீதுசுல்தான், திருப்புல்லாணி ஒன்றிய தலைவர் புள்ளாணி உட்பட அரசு அதிகாரிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு கடலூர் கிழக்கு, மேற்கு திருவண்ணாமலை வடக்கு, தெற்கு விழுப்புரம் வடக்கு, தெற்கு கள்ளக்குறிச்சி வடக்கு, தெற்கு தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மயிலாடுதுறை நாகை திருவாரூர் ஆகிய மாவட்ட மற்றும் கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாநகர நிர்வாகிகள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் கழக ஆதிதிராவிடர் நலகுழு மாநில செயலாளர் , ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ், எம்.பி., அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ. கணேசன், முனைவர் கோவி.செழியன் மா.மதிவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றி 100 நலிவுற்ற ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு பொற்கிழி வழங்கினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராஜேந்திரன், கோ.ஐயப்பன், ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் செ. புஷ்பராஜ், மருதூர் ஏ.ராமலிங்கம், வி.பி.இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளர்கள் பா.துரைசாமி, மு. பொன்தோஸ், சி.தசரதன், மு.பரமானந்தன், அரூர் சா. இராசேந்திரன் , மாரியப்பன் கென்னடி உள்பட ஆதிதிராவிட அணி நலக்குழு நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### காவிரி உபரி நீர் திட்டத்தில் - மீதமுள்ள 25 ஏரிகளுக்கு

# ரூ.105.35 கோடியில் திட்ட மதிப்பீடு சமர்ப்பிப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சேலம், ஜன 2-

காவிரி உபரிநீர் திட்டத்தில் மீதமுள்ள 25 ஏரிகளுக்கும் நீர் நிரப்பும் வகையில் ரூ.105.35 கோடிக்கு திட்ட மதிப்பீடு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் காவிரி உபரிநீர் திட்டத்தில் சுமார் 70 முதல் 80 சதவிகித ஏரிகளுக்கு நீர்நிரப்பப்பட்டுள்ளது என்றும்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்து தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவினை எட்டியுள்ள நிலையில், காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (01.01.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொருப்பேற்று இந்தாண்டு மட்டும் மேட்டூர் அணை 3 முறை நிரம்பியுள்ளது. சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவான 120 அடியினை எட்டியுள்ள நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்றையதினம் மேட்டூர் அணையிலிருந்து காவிரி உபரிநீரை நீரேற்று மூலம் ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்குவது தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் வெள்ள நீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டம் ரூ.673.88 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேட்டூர் அணையானது அதன் முழு கொள்ளளவான 120 அடியினை எட்டும் பொழுது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள நீரை திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையம், வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம், கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் மூலமாக 82 ஏரிகள், குளங்களுக்கு நீர் சென்றடையும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சுமார் 70 முதல் 80 சதவிகித ஏரிகளுக்கு நீர்நிரப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் 4,061.16 ஏக்கர் நிலங்கள் பாசனம் மற்றும் குடிநீர் வசதிபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழையின் காரணமாக மேட்டூர் அணை முழுகொள்ளளவை எட்டியதால் கடந்த 31.07.2024 முதல் மூன்று நீரேற்று நிலையங்களிலும் உள்ள 27 மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளுக்கான சோதனை ஓட்டத்தின் மூலம் 40 ஏரிகளுக்கு 267 மில்லியன் கன அடி நீர் நீரேற்றம் செய்யப்பட்டு 2,300 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. இதன் மூலம் விவசாயப் பயன்பாடு மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், பெஞ்சல் புயலின் காரணமாக சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைப்பகுதிகளில் அதிக மழை பெய்து சரபங்கா ஆற்றின் ஏற்பட்ட வெள்ள பெருக்கு காரணமாக கடந்த 14.12.2024 முதல் 19.12.2024 வரை வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம் மற்றும் கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் இயக்கப்பட்டது. இதன் மூலம் 15 ஏரிகள் முழுகொள்ளளவை எட்டியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, பாரபட்சம் இல்லாமல் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெரும் வகையில் சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களில் நகைக்கடன் பெற்ற 1,43,000 பயனாளிகளுக்கு ரூ.481 கோடியும், 5,200 மகளிர் சுய உதவி குழுக்களை சேர்ந்த 55,000 மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.132 கோடி மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் சுமார் 20 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் 19 கோடி பயணங்களும், மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 24,000 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 16,000 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 82,837 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சிகளும் வழங்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர்.

தற்பொழுது, மேட்டூர் அணை முழுகொள்ளளவை எட்டியதால் திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையத்திலிருந்து வாத்திப்பட்டி ஏரி, செலவடை ஏரி ஆகிய 2 ஏரிகளுக்கும் நீர்குறைந்துள்ள மற்ற ஏரிகளுக்கும் 100 சதவிகிதம் நீர்நிரப்பும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள, 25 ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய் அமைத்திட ரூ.105.35 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், லெனின் நகர் பகுதி பொதுமக்கள் சாலை வசதி வேண்டி தெரிவித்திருந்தனர். இச்சாலை பணிகள் விரைவில் அமைத்துத் தரப்படும் என்ற தகவலை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம் சூரப்பள்ளி கிராமம், வாத்திப்பட்டி எரிக்கு நீர் வந்தடைந்ததை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மலர்தூவி வரவேற்றார்கள்.

இந்நிகழ்வுகளின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, நீர்வளத் துறை சரபங்கா வடிநிலக் கோட்ட மேற்பார்வை பொறியாளர் சிவக்குமார், சரபங்கா வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் அப்புசாமி, மேட்டூர் செயற்பொறியாளர் வெங்கடாசலம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ராஜேஷ் மற்றும் அர்த்தநாரீஸ்வரன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் உடனிருந்தனர்.



சேலம் மாவட்டம், மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவினை எட்டியுள்ள நிலையில், காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் செயல்பாட்டினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (01.01.2025) தொடங்கி வைத்தார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மேட்டூர் சார் ஆட்சியர் திருமதி நே.பொன்மணி, நீர்வளத்துறை சரபங்கா வடிநிலக் கோட்ட மேற்பார்வை பொறியாளர் சிவக்குமார் மற்றும் விவசாயிகள் உள்ளனர்.

### அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவிற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை! - நாளை

# மதுரை வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, ஜன. 2 -

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 16ஆம் தேதி உலகப் புகழ்பெற்ற தமிழர்களின் வீர விளையாட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதால் அது தொடர்பாகவும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் வருகிற மூன்றாம் தேதி மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலக புகழ் பெற்றதாகும். இத்தகைய ஜல்லிக்கட்டு தடை பட்ட போது முதலில் சட்டப் போராட்டம் கண்டு மீட்டுக் கொடுத்தவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆவார். அதேபோல் மீண்டும் தடை கண்ட ஜல்லிக்கட்டை மீட்டெடுக்க பெரும் முயற்சி கொண்டவர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவார் என்பதை நாடே அறியும்.

இத்தனை பெருமை மிக்க உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வருகிற 16.01.2025 ஆம் தேதி வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

அதனையொட்டி முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் வருகிற 03.01.2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மதுரை ஆலத்தூரில் அமைந்துள்ள பி.ஆர். திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

இந்த சிறப்புமிக்க செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# விருதுநகர் மாவட்டத்தில் அண்ணா சைக்கிள் போட்டி!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

விருதுநகர், ஜன. 2 -

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுஆணையம் மூலம் அண்ணா சைக்கிள் போட்டி 2024 நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ம் நாள் முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினை சிறப்பிக்கும் வகையில் அண்ணா சைக்கிள் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் 111வது பிறந்த நாளை முன்னிட்டு இப்போட்டிகள் விருதுநகர் மாவட்டத்தில் வரும் 04.01.2025 சனிக்கிழமையன்று காலை 7.00 மணியளவில் திருவில்லிபுத்தூரில் இருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மொட்டைப்பத்தான் கண்மாய் இறக்கம் திருவில்லிபுத்தூர் என்ற இடத்தில் நடத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்க இந்தியாவில் தயாரான மிதிவண்டிகள் மட்டுமே உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

இப்போட்டிகள் 13 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு 15 கி.மீ, பெண்களுக்கு 10 கி.மீ, 15 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு 20 கி.மீ, பெண்களுக்கு 15 கி.மீ, 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கு 20 கி.மீ, பெண்களுக்கு 15 கி.மீ என 3 பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கு பரிசுகளும் தகுதிச் சான்றிதழ்களும் முதல் 10 இடம் பெறுபவர்களுக்கு தகுதி சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பரிசு விபரம் முதல் பரிசு ரூ.5000/ இரண்டாம் பரிசு ரூ.3000/ மூன்றாம் பரிசு ரூ.2000/ நான்கு முதல் பத்தாம் இடம் வரை ரூ.250/ வழங்கப்பட உள்ளது.

இப்போட்டிகளில் பங்கேற்க தகுதியுள்ள பள்ளி மாணவ/ மாணவியர் தங்களது வயதுச் சான்றிதழை தலைமையாசிரியர் கையொப்பம் பெற்று 04.01.2025 அன்று காலை 7.00 மணிக்கு மொட்டைப்பத்தான் கண்மாய் இறக்கத்தில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் ஆஜராகுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்கள்.

எனவே, மாவட்ட அளவிலான பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விரைவு சைக்கிள் போட்டிகளில் அதிக அளவில் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், கேட்டுக் கொண்டுள்ளார்.

பஸ் ரூட் திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து செண்பகத்தோப்பு வரை செல்லும் பேருந்து. பேருந்து நிறுத்தம் மொட்டைப்பத்தான் கண்மாய் இறக்கம், பேருந்து நேரம் காலை 06.30 மணி திருவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் இருந்து.

# சென்னையில் இன்று மின்தடை!

சென்னை, ஜன.2-

சென்னையில் இன்று (2.1.2025) பராமரிப்பு பணிகள் காரணமாக ஒரு சில பகுதிகளில் மின் தடை செய்யப்படுகிறது. அதன்படி, காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் தடை செய்யப்படும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், தமிழ்நாடு மின்சார வாரியம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

தண்டையார்பேட்டை: வடக்கு டெர்மினல் ரோடு, டி.எச்.ரோடு ஒரு பகுதி, திடீர் நகர், செரியன் நகர், சுடலை முத்து தெரு, அசோக் நகர், தேசிய நகர், நம்மையா தெரு, புச்சம்மாள் தெரு, நாகூரன் கார்டன், பாலகிருஷ்ணன் தெரு, மீன்பிடி துறைமுகம், தனபால் நகர், வெங்கடேசன் அலி தெரு, வீர. ராகவன் தெரு, இருசப்பா மேஸ்திரி தெரு, பூண்டி தங்கம்மாள் தெரு, ஏ.இ.கோயில் தெரு, ஆவூர் முத்தையா தெரு, ஒத்தவாடி தெரு, காந்தி தெரு, வரதராஜன் தெரு, மேட்டு தெரு, கிராம தெரு, குறுக்கு சாலை, சிவன் நகர், மங்கம்மாள் கார்டன், ஜீவா நகர் மற்றும் எம்.பி.டி. பராமரிப்பு பணிகள் முடிவடைந்தால், மதியம் 2 மணிக்கு முன் மின் விநியோகம் தொடங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ், புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.